இலங்கை இநதிய ஒபபநதமசோதாமீது இனறு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 11
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 9 ஜுலகஃ 10 செவ்வாய்க்கிழமை (21-2-67

## வாக்கெடுப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல மசோதாமீதான விவாதம் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில முடிவடைந்து இன்று மாலை மசோதாமீது வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இன்றைய விவாதத்தில தமிழக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், ஆகியோர் தங்கள் நிலையை எடுத்துக் கூறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், மற்றும் தமிழ் எம். பி.க்கள் ஆதரித்து வாக்களிப்பார்களா, எதிர்த்து வாக்களிப்பார்களா என்பதுபற்றி இன்னும் அரசாங்கக்கட்சி பிரதம கொறடாவுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சி

[5ம் பக்கம் பார்க்க]

# இலங்கை இந்தியர்: தி. மு. க. கொள்கை: அண்ணு விளக்கம்

## "'இலங்கையர்' என்ற நேருவின் கருத்தையே ஆதரிக்கிறேம்

### ஒப்பந்தத்தைக் கண்டிக்கிறேம்; நிவாரணமும் நிறைவு தரவில்லை"

— நமது நிருபர் கா. யோகநாதன் —

திருச்சி, பெப். 20

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றி திராவிட முன்னேற்றக்கழகம கொண்டிருக்கும் கொள்கை பற்றி தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை விளக்கம் தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கான மசோதா இலங்கைப் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் தமிழ் நாட்டில் அடுத்து ஆட்சி அமைக்கும் வாய்ப்புள்ள கட்சியாகக் கருதப்படும் தி. மு. க. இலங்கையிலுள்ள இந்திய வமசாவழியினர் பற்றிக் கருத்துத் தெரிவித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## இலங்கை இந்தியர் இலங்கைப்பிரஜைகளே

''இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழி மக்கள் இலங்கையின் குடிமக்கள் என்று காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீநேரு கொண்டிருந்த கொள்கையையே நாங்கள் மதிக்கிறேம்.'' என்று திரு. அண்ணுதுரை தெரிவித்திருக்கிறர்.

'இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக இந்திய-இலங்கை அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நாங்கள் கண்டித்திருக்கிறேம்'' என்றும் அண்ணு தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து வெளியேறி வரும் 'அகதி'களுக்குத் தரப்பட்டுள்ள நிவாரணங்கள் எங்களுக்கு நிச்சயமாக மனநிறைவை அளிக்கவில்லை. சிறு கடைகள் போடும்படி சிறுதொகைகள் வழங்கப்படுகின்றன. இது போதாது. இலங்கையில் மலைத்தோட்டங்களில் வேலைசெய்து பயிற்சி பெற்

5-ம் பக்கம் பார்க்க

## வீதியோரத்தில் ஜவுளி மூடைகள்

### நள்ளிரவில் கைப்பற்றப்பட்டன

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை- காங்கேசன்துறைபிரதான வீதியில் நேற்று நள்ளிரவு ஏழு ஜவுளி மூடைகளை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.எஸ்.ஸி. பத்திராஜவுக்குக்கிடைத்த தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர்தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் வீதியோரத்தில் 7பெரியசாரம், சேலைகள் கொண்ட ஜவுளி மூடைகளைக் கைப்பற்றியதாகக்கூறப்படுகிறது. இவர்களுக்கு இராணுவத்தினர் உதவிபுரிந்தனராம் இந்த ஜவுளிகள் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்டதாகப் பொலிசார் கருதுகின்றனர். சந்தேகத்தின்மீது சிவஞானம், சோமசுந்தரம் ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. டபிள்யூ. வியனகே தொடர்ந்து விசாரணை நடத்திவருகிறர்.

### அரசாங்கத்துக்கு ஆதரவு

சங்கானை; ஞாயிறு

சங்கானைப் பட்டினசபை ஊழியர்கள், காரியாலய வளவில் உபஉணவுப் பயிர்களைப் பயிரிட்டு, அரசாங்கத்தின் உணவு உற்பத்திக் கொள்கைக்கு தமது ஆதரவைக் காட்டியுள்ளனர்.

## தமிழரசு பார்லிமெண்ட் குழு: செனட்டர் மாணிக்கம் விலகிருர்

### இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதாமீது கருத்துவேறுபாடு

கொழும்பு. ஞாயிறு

செனட்டர் மாணிக்கம் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழு, மத்திய குழு, பொதுச்சபை ஆகியவற்றிலிருந்து ராஜிஞமாச் செய்திருக்கிருர்.

தமிழரசுக்கட்சித் தலைவருக்கு செனட்டர் மாணிக்கம் அனுப்பியுள்ள ஒரு நீண்ட கடிதத்தில் தமது ராஜிஞமா பற்றித் தெரிவித்துள்ளார். கட்சிவிரும்பினுல் தமது செனட்டர் பதவியையும் ராஜிஞமாச் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை தமிழரசுக்கட்சி ஆதரித்து வாக்களிக்க முடிவுசெய்திருப்பதில் [illegible] எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள்தான் செனட்டர் மாணிக்கம் தமிழரசுக்கட்சியின் முக்கிய குழுக்களிலிருந்து ராஜிஞமா செய்திருப்பதற்கு காரணமாகும்.

மசோதா செனட்ச[illegible]யில் சமர்ப்பிக்கப்பட்டு[illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

## தொழிற்சாலை

### மாடியிலிருந்து விழுந்து தொழிலாளி மரணம்

கொத்மலை, திங்கள்.

தேயிலைத் தொழிற்சாலையில் வேலைசெய்த தோட்டத் தொழிலாளி ஒருவர் மாடியிலிருந்து கீழேவிழுந்து மரணமானுர்.

திஸ்பனைதோட்ட தேயிலை தொழிற்சாலையில் இரண்டாம் மாடியில் வேலை செய்து கொண்டிருந்த இராமச்சந்திரன் என்ற தொழிலாழி 'சீலின்' பலகை உடைந்து விழுந்ததின் காரணமாக நேற்று கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

இவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. சில தினங்களுக்கு முன்னர்தான் இவரது மனைவி ஒருகுழந்தையை பிரசவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்று நம்மனதிலே அன்பு நிறைந்திருக்கவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது. எல்லாம் இறைமயம் என்பதை மறவாமலிருப்பின் நம் எதிரிகள் மீதும் அன்பு காட்ட முடியும். இதனுல் உலகிலே அமைதியும் நல்லுறவும் பரவுவதாக இருக்கும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelan du Nation l Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 38 .

யாழ்ப்பாணம் பராபவ ஹு
மாசி மீ 9 (21-2-67)

## செனட்டரின் கருத்து

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதா மீதான கருத்து வேற்றுமை காரணமாக தமிழரசுக் கட்சி பார்லிமெண்டரிக் குழுவிலிருந்தும் கட்சியின் மத்திய குழு, செயற்குழு ஆகியவற்றிலிருந்தும் அக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் முத்தையா மாணிக்கம் ராஜிஞமாச் செய்திருக்கிருர். தமது மனச்சாட்சிக்கு விரோதமாக மசோதாவை ஆதரித்து வாக்களிக்க முடியாது என்று கூறும் செனட்டர் மாணிக்கம் 'மசோதா'வின் 'தீங்கு' பற்றி ஓர் அறிக்கையில் விளக்கியிருக்கிருர். அவசிய மேற்படின் செனட்டர் பதவியையும் தாம் ராஜிஞமாச் செய்யத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிருர்.

செனட்டர் மாணிக்கம் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அக் கட்சிக் குழுக்களிலிருந்து தான் விலகியிருக்கிருர். ஆனல் இலங்கை - இந்திய ஒப்பந்த மசோதாவோ, இந்த ஒப்பந்தத்துக்குக் காரணமான இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களோ ஒரு கட்சிப் பிரச்னையல்ல. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களை ஓர்இனப் பிரச்னையாக மட்டும் கருதுவது சரியல்ல. இது மனிதர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை. இதை மனிதாபிமானத்துடன் தான் தீர்வுகாண முனைய வேண்டும். இந்த மசோதாவின் 'தீங்கு' பற்றி செனட்டர் மாணிக்கம் தெரிவித்திருப்பதில் நியாயமில்லையென்று கூறிவிட முடியாது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் பெரும்பாலோர் இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்கள், பரம்பரை பரம்பரையாக இந்நாட்டையே தமது தாய் நாடாகக் கொண்டவர்கள், இந்நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டு மண்ணையும் மிதித்தறியாதவர்கள். இவர்கள் சம்பந்தமாக இரு நாட்டு அரசாங்கமும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது உண்மை. எந்த சூழ்நிலையில், என்ன நிலையில் ஒப்பந்தம் செய்யப்பட்டதென்பது வெளியே தெரிந்திருக்க முடியாது. ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டதென்பதற்காக அதில் சம்பந்தப்பட்ட மக்களின் நலனைப் [illegible]க்கணித்து விடக் [illegible]ாது. [illegible]ந்த மசோதாவில் கட்[illegible] நாடுகடத்தலுக்கு இடமில்லை என்று கூறப்படுகிறது. ஆனல் இந்திய வம்சாவளியினரை கட்டாயமாக இங்கிருந்து அனுப்புவதற்கு இம் மசோதாவில் வாய்ப்பிருக்கிறதென்று செனட்டர் மாணிக்கமும் மற்றும் சிலரும் சொல்கின்றனர். வேறு சிலர் இது பற்றி 'சொல்ல முடியாத நிலை'யில் இருக்கவும் கூடும். இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப் படாதவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் கப்பல்களையும் விமானங்களையும் தடுத்து வைக்க அதிகாரமளிக்கும் அம்சம் கட்டாய நாடு கடத்தல் பற்றிய அச்சத்தை ஊர்ஜிதம் செய்கிறது.

இங்கிருந்து தாமாக விரும்பிச் செல்ல முன் வருவோரை யாரும் தடுத்து நிறுத்த வேண்டியதில்லை. அவர்கள் நிற்கவும் மாட்டார்கள். 'கட்டாய நாடு கடத்தல்' தான் கவலையளிக்கும் அம்சம். இதை இலங்கை-இந்திய அரசாங்கங்கள் தெளிவு படுத்த வேண்டும். இம்மசோதா மீது இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதம் முடிந்து வாக்கெடுப்பு நடை பெறவிருக்கிறது. எனவே 'கட்டாய நாடு கடத்தல்' அம்சம் பற்றி இன்று இலங்கை தெளிவு படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. இம்மசோதா மீது எதிர்க்கட்சியினர் தெரிவித்த சில யோசனைகளை அரசாங்கம் ஆதரித்திருக்கிறது. எனவே கட்டாய நடு கடத்தல் என்ற அச்சத்தையும் அரசாங்கம் நீக்க இடமுண்டு. இந்த மசோதா மனிதர் சம்பந்தப்பட்டது என்பதை நினைவில் கொண்டு மனிதாபிமானத்துடன் சிந்தித்தால் இம்மசோதா பற்றிய கருத்து வேற்றுமை நீங்குவது கடினமல்ல.

# 'மனச்சாட்சிக்கு மாறாக மசோதாவை ஆதரிக்கமாட்டேன்"

## செனட்டர் மாணிக்கம் விளக்கம்

**இந்திய-இலங்கை ஒப்பந்த அமுல் மசோதாவை தமிழரசுக்கட்சி ஆதரிப்பது என எடுத்தமுடிவை எதிர்த்து, கட்சியின் பாராளுமன்றக்குழு, மத்திய செயற்குழு, பொதுச்சபை ஆகியவற்றிலிருந்து தமது ராஜிஞமாவைச் சமர்ப்பித்துள்ளசெனேட்டர் எம்.மாணிக்கத்தின் ராஜிஞமாக்கடிதத்தின் முழு விபரமும் இங்கே தரப்பட்டுள்ளது,**

இந்திய-இலங்கை ஒப்பந்த அமுல் மசோதாவை ஆதரித்து என்னுல் வாக்களிக்க இயலாதென்பதைத் தங்களுக்கு மனவருத்தத்துடன் அறிவிக்க விரும்புகிறேன். அது எனது மனச்சாட்சிக்குவிரோதமானபடியால், மசோதாவை ஆதரித்து வாக்களிப்பதில்லை என்ற மாற்ற முடியாத தீர்மானத்துக்கு வந்துள்ளேன். செனேட் சபையிலிருந்து ஒதுங்கி இருப்பதையோ அல்லது மசோதா மீது வாக்களிக்காமல் இருப்பதையோ சலுகையாக நான் பெறவும் விரும்பவில்லை, அப்படித்தந்தாலும் ஏற்கவும் மாட்டேன். அதே நேரத்தில், தேசிய அரசாங்கத்துடன் கட்சிக்குள்ள தொடர்புகளுக்கு வில்லங்கம் ஏற்படுத்தவும் நான் விரும்பவில்லை. ஆகவே நான் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுவிலிருந்தும் எனது ராஜிஞமாவைச் சமர்ப்பிக்கிறேன். எனது செனேட் தெரிவுக்கு நான் பிரதானமாகப் பாராளுமன்றக் குழுவுக்கே கடமைப் பட்டுள்ளேன். மற்றைய எம்.பி.க்கள் போல் கட்சியுடன் அபிப்பிராய பேதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ராஜிஞமாச் செய்வதாக நான் உறுதிமொழி எதுவும் அளிக்கவில்லையாயினும், என்னைக் கேட்டுக் கொண்டால், நான் உடனேயே செனேட் பதவியிலிருந்தும் ராஜிஞமாச் செய்வேன். கட்சிக்கட்டுப்பாடு என்ற பெயரில் எனதுகுரல் நசுக்கப்பட்டு, மௌனத்தினுள் அமுக்கப்பட்டு விடக்கூடாதே என்பதற்காக இன்று தொடக்கம் மத்திய செயற்குழு, பொதுச்சபை ஆகியவற்றிலிருந்தும் ராஜிஞமாச் செய்கிறேன்.

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு எதிராகத் தமிழரசுக்கட்சி கிளப்பிய ஆட்சேபங்களில் ஒன்று, இந்திய வம்சாவளியினர் 525,000 பேரை கட்டாயநாடு கடத்தல் இருக்குமென்பதேயாகும். ஒப்பந்தத்துக்கெதிராக இந்திய லோகசபையில் பலமான கண்டனக்குரல் எழுப்பப்பட்டபோது, அப்போதைய இந்திய வெளிநாட்டு விவகார மந்திரி சர்தார் சுவரண்சிங், கட்டாய நாடுகடத்தல் என்ற கேள்விக்கே இடமில்லையென்று கூறினர். அப்படியிருந்தும் இலங்கைத் தொழிலாளர் கழகமும், தமிழரசுக்கட்சியின் செயற்குழுவும், கட்டாய நாடுகடத்தல் மனித உரிமைகளை மீறுவதாகும் என்று கூறி, ஒப்பந்தத்தைக் கடுமையாகத் தாக்கின.

இக்கட்டத்தில் கட்டாய நாடுகடத்தல்பற்றி இந்திய அரசாங்கம் ஏற்றுள்ள நிலையைச் சரிவர ஆராய்வது பொருத்தமாகும். ஒப்பந்த அமுல்பற்றிய இந்தியா-இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளின் கூட்டறிக்கையில், இந்தியவெளிநாட்டு விவகார அமைச்சில் பொதுநலநாடுகள் காரியதரிசியான திரு. ஜா, நாடு கடத்தல் சம்பந்தமாகப்பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார் -

''நாடுகடத்தலைப் பொறுத்த வரை, டில்லிப் பேச்சுவார்த்தைகளில் எந்தக்கட்டத்திலும் இக்கொள்கை விவாதிக்கப்படவில்லையெனவும், மொத்தமான கட்டாய நாடுகடத்தல் பற்றிய கேள்விக்கு இடமேயில்லையென இந்தியப் பாராளுமன்றத்தில் இந்திய வெளிநாட்டு விவகார மந்திரி கூறியதாகவும் திரு. ஜா குறிப்பிட்டார். விருப்ப பூர்வமான விண்ணப்பம், சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்பு இவற்றின் அடிப்படையிலேயே ஒப்பந்தத்தின் சுமுகமான அமுலை உறுதிப்படுத்த முடியும். கட்டாய நாடு கடத்தல் விஷயம் பெரிது படுத்தப்படின், ஆரம்பத்திலிருந்தே ஒப்பந்தம் சுமுகமாக அமுலாக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பாதிக்கப்படலாம். ஒருகுறிப்பிட்ட எண்ணிக்கைக்குச் சம்மதம் தெரிவித்ததால், அதில் ஓரளவு கட்டாயத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளதாக வாதிக்கலாம் என்பது உண்மையே. தர்க்க ரீதியாக வாதம் இப்படி அமைந்த போதிலும், விருப்ப பூர்வமான விண்ணப்ப அடிப்படையிலேயே ஒப்பந்தம் பிரதானமாக அமையவேண்டுமென்பதே இந்திய அரசாங்கத்தின் நிலையாகும்... இந்த ஒப்பந்தம் பிரகாரம் இரு அரசாங்கங்களும்அளிக்கும் பிரஜாவுரிமை, இயன்றவரை, இத்தகைய விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே அளிக்கப்பட வேண்டும்''.

எந்தக்கட்டத்திலும், இந்திய அரசாங்கம், கட்டாய நாடுகடத்தல் இருக்கக்கூடாதென்பதைஅறுதியாக, சந்தேகத்துக்கிடமின்றி, பிறிதொரு அர்த்தம் கொள்ள முடியாத தெளிவான மொழியில் கூறவில்லை என்பது மிகக்குறைந்த அறிவுடைய எவருக்கும் கூட விளங்கக்கூடியதாகும். இதற்கு மாருக, கட்டாயநாடு கடத்தல்பற்றிக் கூறப்பட்டவற்றில் எல்லாம் 'மொத்தமான', 'பிரதானமாக', 'இயன்றவரை' ஆகிய சொற்களைப் புகுத்தியதன் மூலம், இந்திய அரசாங்கம் ஓரளவு திரிபுவாதம் செய்துள்ளது.

[நாளைய இதழில் முடியும்]

# ஐயாறன் எழுதுவது

சென்னைக்குச் சென்ற நாளன்றே அங்குள்ள பல பிரபல எழுத்தாளர்களை ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் தங்கியிருந்த 'நியூவுட்லண்ட்ஸ்' ஹோட்டலிலே, புத்தக வெளியீட்டு விழா நடப்பதாயும் முதல் அமைச்சர் பக்தவத்சலம் தலைமைவகிப்பதாயும் பல எழுத்தாளரும் வந்திருப்பரென்றும் கி. வா. ஜ. கூறி அதற்கு வருமாறு அழைத்தார். வானதி பதிப்பகத்தார் பல இந்திய தேசியத் தலைவர்களைப் பற்றிக் குழந்தைகளுக்காக எழுதியுள்ள சுமார் 12 நூல்கள் அன்று வெளியிடப்பட்டன. பல வருடங்களுக்குப் பிறகு, அங்கு பல எழுத்தாளரையும் நேரில் காணலாமென்ற ஆர்வத்திலே, முறையான அழைப்பு இல்லாவிடினும் அதற்குச் சென்றேன்.

அந்தப் பெரிய ஹோட்டலில் திறந்தவெளியரங்கு. அழகான சூழ்நிலை. சுமார் 150க்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கூடியிருந்தனர். சற்று தாமதமாகச் சென்றேன். எல்லோரும் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். தயங்கித் தயங்கிச் சென்றேன். முதலில் தெரிந்த முகம் ஒன்றும் காணவில்லை. சுய அறிமுகம் செய்துகொண்டேன். அன்புடன் பேசினர். பழைய நண்பர் தி. ஜ. ர. எழுந்து வந்து அன்புடன் விசாரித்தார். நடிகர் டி. கே. சண்முகம், கொழும்பு வந்த சில பழைய இன்ப நினைவுகளைச் சொன்னர். எழுத்தாளர் சங்கக் காரியதரிசி [illegible] இலங்கையிலிருந்து அழைப்பு [illegible] விழா கிடைத்தால் வர ஆவலாக இருப்பதாயும் தெரிவித்தார்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே, மேடையில் இருந்த கி. வா. ஜ.விடமிருந்து அழைப்பு வந்தது. அங்கு சென்றேன். அன்று கூட்டத்துக்கு முதல் அமைச்சர் வரவில்லை. வேறொருவர் தலைமைவகித்தார். பல எழுத்தாளர் பேசினர். கிண்டல், மறைமுகமான குத்தல் எல்லாம் இருந்தன. ஒரு பிரபல எழுத்தாளர், அதை காங்கிரஸ் பிரசார மேடையாக்கினர். என்னையும் பேசுமாறு கேட்டனர். அந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டாயிரம் பிரதிகளே அச்சிட்டிருப்பதாக அறிந்தேன். தமிழ்கூறும் நல்லுலகிலே மூன்றரைக்கோடி பேருக்கு மேலுள்ளனர். ருசியான நூல்களில் இரண்டாயிரம் பிரதிகள் விற்கவும் இவ்வளவு செலவும் பிரசாரமும் என்பதைப் பார்க்க வியப்பாக இருந்தது. உரிமையாளர் திருநாவுக்கரசு, இதுவரை 300 நூல்களுக்கு மேல் வெளியிட்டிருக்கிருராம். தமிழகத்திலே தமிழ்ப் புத்தகங்கள் விற்பனை இப்படியென்ருல் ஈழத்தில் கேட்கவேண்டுமா? எழுதியவர்களுக்குக் கதராடை போர்த்திப் பாராட்டினர். எல்லோருக்கும் பெரிய பெரிய ரோஜாப்பூ மாலைகள் போட்டனர். சின்னக் கூட்டமாயினும், பேச்சாளருக்குப் பூமாலை போடுவது தமிழகத்தில் ஒரு பண்பாக இருக்கின்றது. எவ்வளவு வாச மலர்கள்!

மாலை போட்டதும் உடனே அதைக் கழற்றி விடுவதோ அல்லது போட வரும்போதே இரு கைகளாலும் தடுத்து, அதை வாங்கி மேசையில் வைப்பதோதான் மரியாதை என்று நம்மில் பலர் நினைக்கின்ருேம். அவ்வளவு கஷ்டப்பட்டு அழகாகக் கட்டிய மாலையைக் கழற்றிவிடத் தான்வேண்டுமா? பேசும் வரை போட்டுக்கொண்டிருந்தால் அது கூடாதா? பண்பற்ற செயலா? என்று சந்தேகம் எழுவதுமுண்டு. ஒருமுறை வண. தனிநாயக அடிகளார் இதைப் பற்றிப் பேசி, பேசும்வரையிலாவது மாலையைப் போட்டுக்கொள்வதேசரியென்றுகூறி, தாமே அவ்விதம் செய்துகாட்டினர். மாலை போடுவது நமது உடலுக்கல்ல. உடம்பினிலுள்ளே ஓர் உத்தமன் கோயில் கொண்டிருக்கின்ருனல்லவா? அவனுக்குத்தான் அந்த மரியாதை என்று நினைப்பு மூட்டிக்கொண்டால் மாலையை உடன் கழற்றத்தேவையில்லை தானே! இதற்கு மாருக, போடும் மாலை நம் உள்ளே இருக்கும் தெய்வீகத்தை நினைவு மூட்டி விடுவதால் அந்த தெய்வ சக்தி பேச்சையும் நன்கு, பயனுள்ளதாகச் செய்வதாகவுமிருக்கலாம். என்ருலும், அந்தக் கூட்டத்திலே பலரும் மாலையை உடனுக்குடன் கழற்றிவிட்டனர்!

இலங்கையிலிருந்து எழுத்தாளர் மு. கணபதிப்பிள்ளை அவர்களும் அங்கு வந்திருந்தது மகிழ்ச்சியும் வியப்பும் அளித்தது. மாயாவி, பார்த்தசாரதி முதலிய பலரையும் கண்டேன். இலங்கைக்கு வந்துவர அங்கு பல எழுத்தாளரும் ஆவலுடன் இருக்கிருர்கள்.

]5-ம் பக்கம் பார்க்க[

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பொதுத் தேர்தல் இன்றுடன் முடிவு: தேர்தல் முடிவுகள் இரவுமுதல் வெளியாகும்

## கேரளத்தில் சுமுக வாக்களிப்பு; தமிழ்நாட்டில் இறுதிவாக்கெடுப்பு

புதுடில்லி, பெப். 20

இந்தியாவின் பதினான்கு ராஜ்யங்களிலும் மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் இன்றுடன் தேர்தல்கள் முடிவடைந்தன. நாளை செவ்வாய்க்கிழமை தமிழ் நாட்டிலும் வேறு மிகுதியாகவுள்ள இரண்டு ராஜ்யங்களிலும் கடைசிச் சுற்று வாக்களிப்பு நடைபெறும்.

சில ராஜ்யங்களில் நாளை நடைபெறும் வாக்குப் பதிவை பாதிக்காத வகையில் இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் நாளை இருபத்தோராம் திகதி மாலையிலிருந்து அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் கமிஷனர் இன்று அறிவித்துள்ளார்.

இன்று மூன்று ராஜ்யங்களிலும் இரண்டு மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் வாக்களிப்பு நடைபெற்றது. மொத்தம் 470 தொகுதிகளில் நடைபெற்ற வாக்களிப்பில் இரண்டு கோடியே நாற்பத்தைந்து லட்சம் வாக்காளர்கள் கலந்து கொண்டனர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

### கேரளத் தேர்தல்

முப்பது மாத ராஷ்டிரபதி ஆட்சிக்குப்பின்னர் இன்று கேரளத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. கேரளத் தேர்தலில் இன்று 133 ராஜ்ய சட்ட சபை ஸ்தானங்களுக்கும் 19 லோகசபை ஸ்தானங்களுக்கும் வாக்குப் பதிவு நடைபெற்றது. சட்டசபைக்கு 420 அபேட்சகர்களும் லோக சபைக்கு அறுபது அபேட்சகர்களும் போட்டியிட்டனர். இவர்களில் ஒன்பது பேர் பெண்கள். 1965-ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட 164 அபேட்சகர்களும் முன்னாள் முதன் மந்திரி, மத்திய மந்திரிகள், சட்டசபை சபாநாயகர்கள் ஆகியோரும இன்றையத் தேர்தலில் போட்டியிட்டனர்.

லோகசபை தேர்தலைப் பொறுத்த வரையில் மூன்று நேரடிப் போட்டிகளும் பத்து முத்தரப்பு போட்டிகளும் ஐந்து நான்குமுனைப் போட்டிகளும் இருந்தன. காங்கிரஸும் மற்றும் முக்கிய ஐந்து கட்சிகளும் வேறு பதினொரு கட்சிகளும் இத்தேர்தலில் குதித்திருந்தன. கேரளத் தேர்தலைப் பொறுத்த வரையில் இங்கு ஒரு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. லோக சபை, சட்டசபை என்று இருக்காது ஒரே ''சீட்டில் இரண்டு ஸ்தானங்களுக்கும் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வாக்காளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இன்று காலையில் ராஜ்யத்தின் பல தொகுதிகளிலும் நீண்ட ''கியூ'' காணப்பட்டது. வாக்காளர்களிடையே பெரும் உற்சாகம் காணப்பட்டதென்றும் வாக்களிப்பு சுறுசுறுப்பாக காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன இங்கு காலநிலையும் சீராகக்காணப்பட்டது.

### 3 ராஜ்யங்களில் வாக்களிப்பு

இன்று கோரளம், மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்திய நிர்வாகப் பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மணிப்பூர் ஆகிய இடங்களிலும் வாக்களிப்பு நடைபெற்றது. மத்திய பிரதேசத்தில் பெருமளவு சட்டசபைத் தொகுதிகளுக்கு இன்று வாக்களிபு நடந்தது. மொத்தமாகவுள்ள 296 சட்டசபை ஸ்தானங்களில் 204 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெற்றது. இன்றைய தேர்தல்களில் பதினொரு ராஜ்ய மந்திரிகளின் தொகுதிகளில் வாக்கெடுப்பு இடம் பெற்றது.

[4-ம் பக்கம் பார்க்க]

கட்சிப் பதவிகளிலிருந்து

## அதிபர் லியூ-ஷா-ஷி நீக்கப்பட்டார்

### பீகிங்கின் வசைமாரி வடகொரியா மீது திருப்பம்

ஹாங்காங், பெப். 20

சீன அதிபர் லியூ-ஷா-ஷி சகல கட்சிப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரத்தை பீகிங்கிலுள்ள செங்காவலர்களின் சுவரொட்டிகள் தெரிவிப்பதாக பீகிங்கில் உள்ள வெளிநாட்டு நிருபர்கள் செய்தி அனுப்பியுள்ளனர்.

இதற்கிடையே சீனுவின் கிழக்குக் கரையோரத் துறைமுகமொன்று மா—ஸே—துங் எதிர்ப்பாளர்களிடம் வீழ்ந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. ஷங்காயில்மா-ஸே-துங் ஆதரவாளர்களின் கை ஓங்கிவந்தபோதிலும் அங்கு ஆட்சியை இன்னும் கைப்பற்றவில்லையென்று கூறப்படுகிறது.

#### வடகொரியா மீது ''தாக்குதல்''

பீகிங்கின் தாக்குதல் இப்பொழுது வடகொரியா மீது திரும்பியிருக்கிறது.

வடகொரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சோவியத் முன்னாள் பிரதமர் குருஷ்சேவைப் பின்பற்றுபவர்கள்என்றும் கொள்கை திரிபுவாதிகள் என்றும் பீகிங் குற்றம் சுமத்தியுள்ளது.

## பதவியிலிருந்து விலக சுகர்னோ மறுப்பு

ஜாகர்த்தா, பெப் 20

அதிபர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டுமென்ற இந்தோனேஷிய தலைவர்களின் கடைசிக் கோரிக்கையையும் சுகர்னோ நிராகரித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

அதிபர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்வதற்கு சுகர்னோ மறுத்து வருவதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து இந்தோனேஷிய நிர்கத் தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோவும் முப்படைத் தளபதிகளும் நேற்று மேற்கு ஜாவாவிலுள்ள போகூர் அரண்மனையில் அதிடர் சுகர்னோவைச் சந்தித்து மூன்று மணிநேரம் வரை பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் போது சுகர்னோ, பதவியிலிருந்து விலக வேண்டுமென்பதை அவர்கள் வற்புறுத்தியதாகச் சொல்லப்படுகிறது. கடைசிவரையிலும் சுகர்னோ இவர்களது யோசனையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டாராம்.

---

### கலைநிகழ்ச்சி காணவசதி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையின் சார்பில் திறந்தவெளியரங்கில் நடாத்தப்படும் கலைநிகழ்ச்சிகளை மாநகரசபை எல்லைக்குள் உள்ள பொதுமக்கள் கண்டுகளிப்பதற்கு விசேஷ போக்குவரத்துவசதிகளைச் செய்துதரும்படி இ.போ.ச.முகாமையாளரை மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு.என்.நடேசன் கேட்டுள்ளார்.

அவர் தமது மகஜரில், உள்நாட்டுக் கலைஞர்களின் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதில் ஆர்வம்கொண்டுள்ளதேசிய அரசாங்கத்தின் நோக்கத்தைத் தக்கவகையில்பொது மக்கள் பயன்படுத்தவேண்டும் என்றும் இதற்காக மாநகரசபை எல்லைக்குள் உள்ள கொழும்புத்துறை, வண்ணார் பண்ணை, கந்தர்மடம், அரியாலை முதலிய பல்வேறு இடங்களிலும் உள்ளபொது மக்கள் இந்நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க விசேஷ பஸ் போக்குவரத்து வசதிகளைச் செய்யும்படியும் கேட்டுள்ளார். [ந.நி.]

---

### தந்திக் கம்பி திருட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் தினமும் அதிகமான தந்திக்கம்பிகள் இரவுநேரங்களில் களவாக வெட்டப்படுவதாகவும், இவைகளை அதிகமாக ஒய்வுபெற்ற தந்திப்பகுதி ஊழியர்களே செய்துவருவதாகவும் பொலிசார் சந்தேகப்படுகின்றனர் நேற்றுமுன் தினமிரவும் அரியாலையில் பலநூற்றுக்கணக்கான யார் தந்திக்கம்பிகள் களவாகவெட்டப்பட்டுள்ளதாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்களவினுல்பல முக்கியமானதந்திச்சேவைகள் மணித்தியாலக்கணக்கில் தாமதமாவதினுல் தந்திப்பகுதியினரின்ஒத்துழைப் புடன்சம்பந்தப்பட்ட திருடர்களைக் கண்டுபிடிப்பதில் யாழ்ப்பாணப்பொலிசார் தீவிரமாகஈடுபட்டுள்ளனர். [ந.நி.]

---

### சிரமதானம்

வல்வெட்டித்துறை, திங்கள்

பொலிகண்டி வீரபத்திரர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள 1080அடி நீளமுள்ள பிரதானவீதியை பாரதி சனசமூக நிலையத்தின் ஆதரவில் அவ்வட்டாரப் பிரதிநிதி திரு. எஸ். சிவராசாவும் மாணவர்களும் சேர்ந்து சிரமதான மூலம் திருத்தி அமைத்துள்ளனர். அவ் வீதியினை அடுத்தவாரம் அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா திறந்து வைப்பார்.

---

பீகாரில்

## வாக்களிப்பு நிலையம் தீவைக்கப்பட்டது பொலிஸ் சூட்டில் ஒருவர் பலி

புதுடில்லி, பெப்.20

நேற்று சில ராஜ்யங்களில் தேர்தல் கைகலப்புகள் மூண்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

பீஹாரில் அலி நகரில் வன்முறைக்கும்பலொன்று வாக்களிப்பு நிலையமொன்றுக்கு தீவைத்தது இதனைத்தொடர்ந்து இக்கும்பல் வாக்குப் பெட்டிகளைச் சூறையாட முயன்றது என்றும் அப்பொழுது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சிலர் காயமடைந்தனர்.

#### 10பேர் காயம்

இதேதொகுதியில் மற்றுமொரு வாக்களிப்பு நிலையத்தின் முன்பாக மாற்றுக்கட்சியினருக்கிடையே நிகழ்ந்த கைகலப்பில் பத்துப்பேர் காயமடைந்தனர்.

#### கத்திக்குத்துக்கு பலி

மேற்குவங்காளத்தில் ஒரு வாக்களிப்பு நிலையத்தின் முன்பாக இரண்டு கட்சி ஆதரவாளர்களுக் கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார் என்றும் [illegible]லேயே துடிதுடித்து [illegible]தாகவும் அறிவிக்கப்பட்டது. இச்சம்பவம் வாக்களிப்பு நிலையத்தின்முன்பாக நிகழ்ந்தது.

மேற்குவங்காளத்தில் மற்றுமொருபகுதியில் ஏற்பட்ட கைகலப்யில் பலர் காயமடைந்தனர்.

#### ஹரியாணுவில்

ஹரியாணுவில் வாக்களிப்பு நிலையத்தின்முன்பாக இரண்டு கட்சி ஆதரவாளர்களுக்கிடையேஏற்பட்ட கைகலப்பு காரணமாக வாக்களிப்பு நிறுத்தப்பட்டது.

கல்கத்தாவில் போட்டிக் கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் சிலர் காயமடைந்தனர்.

---

### மின்சார விநியோகம்

அச்சுவேலி. திங்கள்

8000 ரூபா செலவில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அடுத்த மாதமுதல் மின்சார விநியோகம் அளிக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரவேசம்

## பிரச்னையை வளரவிடாது தடுப்பது எம். பி. க்களின் பொறுப்பு

### கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்மாதம் 18-ந் திகதி சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணியோடு அரசாங்க அதிபர் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றி பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திகள் பொதுவாகத் திருப்திதரவில்லை என கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளை தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்று மாதங்களுக்கு முன் அரசாங்க அதிபர் அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் முன்னணியினர் வைத்த கோரிக்கைகளை மாகாண ரீதியில் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையை உருவாக்கினார். ஆனால் அநேகமான கோவில்கள் தனி சொத்துடமையாக இருப்பதாக அரசாங்க அதிபர் இப்போது தெரிவித்துள்ளார். இது விஷயத்தில் அரசாங்க அதிபரில் ஏதும் குறை கூறுவதற்கில்லை. அவர் தன்னாலானவற்றைச் செய்ய முயன்றுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சம்பந்தப்பட்டவர்களின் மனம் திரும்புவதன் மூலமே ஆலயப்பிரவேசம் சாத்தியமாகுமென அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். ஆலய உரிமையாளர்கள், தர்மகர்த்தாக்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் மனதைத் திருப்பும் விஷயத்தில் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் அரசியற் கட்சித் தலைவர்களும் முன்னின்று செய்வதற்கு முன்வரவேண்டும். இது இவர்களது முக்கிய பொறுப்பு என்பதும் உணரப்படவேண்டும்.

இந்தப்பிரச்னையைமேலும் வளரவிடாமல் இதுவிஷயத்தில் தலையிட்டு விரைவில் இதைச் சுமுகமான முறையில் தீர்த்துவைக்கும்படி சகபாராளுமன்ற அங்கத்தவர்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

## பெற்றோரின் ஒத்துழைப்பு போதாது

### பளை மகாவித்தியாலய அதிபரின் கவலை

பளை, திங்கள்

'ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு பெற்றோரது ஒத்துழைப்பு மிக அவசியம். ஆனால் இப்பகுதியில் போதிய ஒத்துழைப்பு பெற்றோரிடமிருந்து வராதது சிறிது கவலையளித்துள்ளது'.

இவ்வாறு பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் - ஆசிரிய சங்கக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. எஸ். இராசநாயகம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கல்லூரியில் இருந்து வரும் பல குறைபாடுகளைப் போக்குவதற்கு ஆசிரியர்களுக்கு பெற்றோர் முன்வந்து உதவினால் கல்லூரியின் தரம் உயர்வதுடன் மாணவரின் கல்வித் தரமும் உயரும்.

பிள்ளைகள் கல்லூரிக்கு ஒழுங்காகச் செல்கிறார்களா என்பது பற்றி பெற்றோர் பார்த்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகள் ஒழுங்காக வராவிட்டால் அவர்களது கல்வி பாதிக்கப்படுவதுடன் ஆசிரியர்களும் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியாமலிருக்கும். எனவே கல்லூரியின் தரம் உயர்வதற்கு பெற்றோர் தம் பங்கை உணர்ந்து உழைக்க முன்வரவேண்டும்.

## விவசாய விருத்திக்கு இளைஞர் சேவை

உடுவில், திங்கள்

''உள்நாட்டு விவசாயத்தைப் பெருக்கி, அரிசித்தட்டுப்பாட்டைத் தீர்க்க அனுபவமும் திறமையும் வாய்ந்த தொழிலாளர்களே தேவை. இதற்கு எம்போன்ற இளம் தொழிலாளர்களும் விவசாயிகளும் விவசாயத்துறையில் ஈடுபட்டு அரிசித் தட்டுப்பாட்டை நீக்க, உற்பத்தியை பெருக்கத் தயாராகவேண்டும்'' என்று விவசாய அபிவிருத்திப் பிரசாரக் கூட்டமொன்றில் விவசாயக் கிளைக் குழுத்தலைவர் திரு. பி. கமலநாதன் பேசுகையில் கூறினார். கூட்டத்திற்கு திரு. வி. கணேசன் தலைமைவகித்தார்.

## சைவத்தை உலகறியச் செய்தவர்

கொட்டாஞ்சேனை திங்கள்

''உலகத்தில் இந்து சமயம் என்ற ஒரு சிறந்த சமயம் இருக்கிறதென்பதை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். அவரின் ஜயந்தி தினத்தை நாம் வருடந்தோறும் நினைவு கூர்வது நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.''

இவ்வாறு சுவாமி பிரேமாத்மானந்தா, விவேகானந்தரின் ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் நிகழ்த்திய பிரசங்கம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் இந்து சமயத்திற்கு சுவாமிகள் செய்த தொண்டு மிகவும் அளப்பரியது என்றும் கூறினார்.

அடுத்து சுவாமிகளின் நினைவாக நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்களை சுவாமி பிரேமாத்மானந்தா வழங்கினார்.

## மயிலிட்டி கி. ச. தேர்தல்

பலாலி, திங்கள்

மயிலிட்டிக் கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான இறுதித் திகதி இம் மாதம் 28-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசபைக்கு உள்ளடங்கிய 18 வட்டாரங்களிலும் பலர் போட்டியிடுகின்றனர். மயிலிட்டி வடக்கு 9-ம் வட்டாரத்தில் மயிலிட்டி, காங்கேசன்துறை துறைமுகத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். செல்லையாவும், திரு. எ. பொன்னரும் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் கட்டியுள்ளனர்.

## தாக்கியதாக குற்றச்சாட்டு

சாவகச்சேரி, திங்கள்

கிளிநொச்சிப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த நாகலிங்கம் தவராசா என்பவரை இவ்வருடம் ஜனவரி 31-ம் திகதி வீரகத்திபெண் புத்தியாட்டி, வீரகத்தி சிவஞானம் ஆகியோர் தாக்கிப் படுகாயப்படுத்தியதாகக் கிளிநொச்சிப் பொலிசில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிசார் அவ்விரு சந்தேகநபர்களையும் கைது செய்து சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா முன்னிலையில் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் அவ்விரு சந்தேகநபர்களையும் இம்மாதம் 22-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி கட்டளையிட்டார்.

## நகை திருடியவருக்கு சிறை

சாவகச்சேரி, திங்கள்

கிளிநொச்சியைச் சேர்ந்த துரைராசா என்பவருக்குச் சொந்தமான 2500 ரூபா பெறுமதியான நகைகள் பணம் ஆகியவற்றைத் திருடியதாக பி. பழனி என்பவர் மீது கிளிநொச்சிப்பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் இந்நபர் முன்பும் ஐந்துதடவைகள் குற்றப்பட்டிருப்பதாகத் தெரியவந்ததைத்தொடர்ந்து மாஜிஸ்திரேட் இந்நபரை நோக்கி ''இக்குற்றத்தில் வழங்கப்படும் தண்டனையைக்குறைத்துக்கொள்ள ஏதாவது காரணம் காட்டமுடியுமா எனக் கேட்டபோது அவர் ''தமக்கு மூன்றுபிள்ளைகளுண்டு எனத் தெரிவித்தார். மாஜிஸ்திரேட் அவரைநோக்கி 'உமக்கு ஆகக்குறைந்த தண்டனையே வழங்கப்படுகிறது' எனக்கூறி 50 ரூபாய் அபராதமும் ஒருவருடச் சிறைத் தண்டனையும் ஒரு வருடப் பொலிஸ் பாதுகாப்புமாகத் தீர்ப்புவழங்கினர்.

## 'காடுகளை அழித்துக் களனி யாக்குங்கள்'

குமுழமுனை, திங்கள்

'வாலிபர்களே திரண்டு வாருங்கள். எமது வன்னித் தொகுதியின் காடுகளை அழித்துக் களனி ஆக்கி விவசாயத்தைப் பெருக்கி ஈழத்தின் தானியக் களஞ்சியமாக எம் வன்னியை மீண்டும் மிளிர வைப்போம்' என வலையன்மடம் மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டார். வரவேற்பு வண. ம. பாவிலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. யோ. தாவீது, மி. அந்தோனிப்பிள்ளை ஆகிரும் பேசினர்.

## உள்ளூராட்சி உதவிஆணையாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

பொலிகண்டி மீனவர்களின் வீட்டுத்திட்டத்துக்கு அருகாமையில் வல்வெட்டித்துறைப் பட்டினசபையினர் மலத்தைப் புதைத்து வருவதை உடனடியாகநிறுத்துமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். மாணிக்கவாசகர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிகண்டி மீனவர்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துதிரு. மாணிக்கவாசகர், மலங்களை இம்மாதம் முதல் வல்லைவெளியில் புதைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் பாராட்டி மேற்படி மீனவர்கள் திரு. மாணிக்கவாசகருக்கு [illegible]

## இந்தியப் பொதுத் தேர்தல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### 100 சதவிகித வாக்களிப்பு

ஆந்திரபிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தலில் குண்டூர் ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்திலும் மற்றுமொரு கிராமத்திலும் நூறு சதவிகித வாக்காளர்கள் வாக்களித்தனர்.

இன்றுடன் பதினென்கு ராஜ்யங்களிலும் சகல மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் வாக்களிப்பு பூர்த்தி அடைந்தது.

### இன்றையத் தேர்தல்

நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்நாட்டிலும்வேறு இதர ராஜ்யங்களிலும் கடைசிச் சுற்று வாக்களிப்பு நடைபெறும். தமிழ் நாட்டில் நாளை பதின்மூன்று லோகசபை, 28 சட்டசபை ஸ்தானங்களுக்கு வாக்குப் பதிவு இருக்கும். கடந்த 15, 18-ம் திகதிகளில் 26 லோகசபை ஸ்தானங்களுக்கும் 155 சட்டசபைத் தொகுதிகளுக்கும் வாக்களிப்பு நடைபெற்றிருந்தது. நாளை தேர்தலில் 70 லட்சம் பேர் வாக்களிப்பார்கள்

ஒரிஸாவில் நாளை ஒருநாள் தேர்தல் நடைபெறும். இங்கு 20 லோகசபை ஸ்தானங்களுக்கு 65 பேரும் 131 ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளுக்கு 594 பேரும் வாக்களிப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## சிறுசிறு சம்பவங்கள்

○ பங்களூரில் ஒரு தொகுதியில் கல்யாணமண்டபத்தில் வாக்குப்பதிவு நடைபெற்றதில் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த அந்த இடத்தில் வாக்களிப்பு ஆரம்பமானதும், வாக்களிக்க வந்தவர்களுக்கும், திருமணக்கோஷ்டியினருக்குமிடையே கைகலப்பு மூண்டுவிட்டது.

○ மைசூரில் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குப் பதிவு ஆரம்பமாவதற்கு முன்னர் கற்பூர தீபாலங்காரம் காட்டப்பட்டுப் பூசை நடத்தப்பட்டது இதன் பின்னரே வாக்குப்பதிவு ஆரம்பமானது.

○ ஹரியானவில் நேற்று 105, 113 வயதுள்ள இருவர் வாக்களித்தனர்.

○ மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு தொகுதியில் உடல் ஊனமுற்ற 90 வயதுள்ள ஒரு முஸ்லிம் அபேட்சகர் தனது பேரனின் தோளில் ஏறிக்கொண்டு வாக்களிக்க வந்திருந்தார்.

○ உத்தரப் பிரதேசத்தில் நேற்று சில வாக்களிப்பு நிலையங்கள் மீது பனி பொழிந்திருந்தது. 8 அங்குல அளவுக்குப் பனி உறைந்திருந்தது.

○ கல்கத்தாவில் ஒரு வாக்களிப்புநிலையத்தில் நியமிக்கப்பட்டிருந்த 2 தேர்தல் அதிகாரிகள் நேற்று வரவில்லை

○ இன்று நடைபெற்ற கேரளத் தேர்தலில் கண் பார்வையிழந்த ஒருவரும் போட்டியிட்டார்.

○ வேலூருக்கு அண்மையில் உள்ள காட்பாடியில் 2 கைகளையும் இழந்த ஒரு முடவரான 50 வயதுள்ள ரெங்கசாமி வாக்களித்தார். தேர்தல் அதிகாரி இவருக்கு உதவினார்.

○ நெல்லை மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளம் சட்டசபைத் தொகுதியில் எதிர்ப்பு அணி சார்பில் போட்டியிடும் எஸ். டி. ஆதித்தன் என்பவரின் கார் நொறுக்கப்பட்டது.

○ ஆந்திராவிலுள்ள நெல்லூர் மாவட்டத்தில் சட்டசபைத் தொகுதியொன்றில் இரு கோஷ்டிகள் மோதிக்கொண்டதில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.

## மூளாய்-கீரிமலை பஸ்சேவை

சுழிபுரம், திங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலிருந்துசுழிபுரம், சித்தங்கேணி கிராமத்துக்கூடாக இ. போ. ச. யாழ். மேற்குபகுதியினர் ஒருபுதிய பஸ்சேவையை ஆரம்பித்துள்ளனர். இச்சேவைகாலை முதல் மாலைவரை தினமும் நடைபெறும். இதனால் மூளாய், சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய இடங்களைச்சேர்ந்த மக்கள் கீரிமலை, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகியஇடங்களுக்குச் சுலபமாகச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதேபோல கீரிமலைப்பகுதியைச்சேர்ந்தவர்கள் சுலபமாக மூளாய்கூட்டுறவுவைத்தியசாலைக்கு செல்லக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது,

## கோப்பாய்க்கு புதிய வித்தியாதரிசி

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

திரு. எம். குணரத்தினம் இம்மாதம் தொடக்கம் கோப்பாய் வட்டாரப் பாடசாலை வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவில் ஓராண்டு காலம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கி. மு. சங்க அங்குரார்ப்பணம்

துணுக்காய், திங்கள்

துணுக்காய்ப் பகுதியைச் சேர்ந்த யோகபுரம் மேற்கில் ஒரு கிராமமுன்னேற்றச்சங்கம் கிராமமுன்னேற்ற அதிகாரி திரு. க. கிருஷ்ணபிள்ளையால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது கூட்டத்திற்கு துணுக்காய்ப் பகுதி கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாஜத்தின் தனதிகாரி திரு. க. சந்திரசேகரமும் சமுகமளித்திருந்தார்.

நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கா. தம்பு, உபதலைவர். திரு. வெ. சரவணமுத்து, காரியதரிசி திரு. வ. அம்பலவாணர், உப காரியதரிசி: திரு. ச. கணபதிப்பிள்ளை, தனதிகாரி. திரு. ஐ. ஐயாத்துரை. 4 பேர் கொண்ட ஒரு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## கடூழியச் சிறை

மாவிட்டபுரம், ஞாயிறு

பொலிஸ் நிலையத்துக்குச் செல்லத் தவறிய ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா இரண்டுமாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

இவ்வழக்கில் புத்தூரைச் சேர்ந்த காசியர் சரவணமுத்து என்னும் பலதரப்பட்ட குற்றவாளி மாதாமாதம் தனது நடத்தையைப்பற்றிப் பொலிஸிற்கு அறிவிக்கத் தவறியதாகச் சுன்னாகம் பொலிஸாரால் குற்றம்சாட்டப் பட்டிருந்தது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி எதிரிக்கு இரண்டுமாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

கீழ்க் குறிக்கப்படும் பதவிக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம் விண்ணப்பம் கோருகின்றது. தகைமையுடையோர் 15-3-67ம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் ''கௌரவகாரியதரிசி அவர்களுக்கு, யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவுச் சங்கங்களின் சமாசம். 10 1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்போர் பதிவுத்தபாலின் மேல்உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''கணக்கு மேற்பார்வையாளர் பதவி'' எனக் குறிக்கவும்.

**கணக்கு மேற்பார்வையாளர் பதவி**

விண்ணப்பிப்போர் ஆங்கிலம் அல்லது தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், எண்கணிதம் அல்லது கணிதம் ஆகிய இம் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும், கூட்டுறவுக்கலாசாலைப் பயிற்சியும், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வர்த்தக கணிதம் ஆகியவற்றில் அறிவும், இப் பதவி அனுபவமும் விரும்பத்தக்கது.

**வயது:**

15-2-67ம் திகதி அன்று 25 வயதிற்குக் கீழ்ப்படாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

**சம்பளம்:**

ரூபா 250 - தொடக்கம் 450/- வரை. அலவன்ஸ்: 33 1/3%.

இங்ஙனம்

[ஒப்பம்] **து. சினிவாசகம்**

கௌரவ காரியதரிசி.

18-2-67.
யாழ்ப்பாணம்.

2442

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

**செவ். 21 - 2 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 நிலைய ஒலிப்பதிவுகள், 6-45 கிராம சஞ்சிகை' 7-15 வீணை, 7-45 யுனெஸ்கோ உரைச்சித்திரம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதசுரம், 10-15 தேர்ந்தஇசை.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
ஓயாதினங்களில் 4 காட்சிகள்
**சத்த பனஹா**
[சிங்களம்]

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
Tony Russell & Isa Gastoni
in
**THE WILD WILD WILD PLANET**
(Adults Only)

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
**BIKINI BEACH**
Panavision - Pathecolour

**நவா**
கொம்பனித்தெரு
**கிங்ஸ்லி** கொழும்பு
**பிளாஸா** வெள்ளவத்தை
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

**3வது வெற்றி வாரம்!**

**விஜயா** மட்டக்களப்பு
**ஸ்ரீ கிருஷ்ணா** திருமலை
**விஜிதா** ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

**எஸ். எஸ். ராஜேந்திரன்**
**விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா**
**எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா**
முதலியோர் நடிக்கும்

**காக்கும் கரங்கள்**

**இன்று மட்டும்**

**கெப்பிட்டல்** கொழும்பு
**மொடேர்ன்** பண்டாரவளை

**எம். ஜி. ஆர்., ரத்னா,**
**கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ், மனோரமா**
மற்றும் பலர் நடிக்கும்

**தொழிலாளி**


# மத்திய கல்லூரி இனிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்தியகல்லூரி இனிங்சாலும், 3 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. இப்போட்டியில் மத்திய கல்லூரியின் துடுப்படி வீரர் ஏபிரகாம் 100 ஓட்டங்களையும், பந்தெறி வீரர் சத்தியதேவா 15 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும் வீழ்த்தி வெற்றிக்கு வழி அமைத்தனர்.

முதல் இனிங்சில் யாழ். இந்து துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 53 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரி துடுப்பெடுத்தாடி 7 விக்கெட்டுகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

2-ம் இனிங்சில் யாழ். இந்து துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி இரு நாட்கள் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# ஐயாறன்

[2ம்-பக்கத் தொடர்ச்சி]

ஆனால் இரு அரசாங்கங்களும் போட்டாபோட்டியில் தடைபோட்டுக்கொண்டிருக்கின்றன. எழுத்தாளனின் பேனா, வீரனின் வாளை விடப் பன்மடங்கு சக்தி வாய்ந்ததென்று கூறுவதுண்டு. அதை அந்த எழுத்தாளத் தோழருக்கு நினைவுபடுத்தி, எழுத்தாளர் சங்கங்கள் இதுபற்றி ஏகோபித்துக் கிளர்ச்சிசெய்தால் [இலங்கையிலும் தான்] எந்த அரசாங்கம் அதை எதிர்த்து, இந்த அடிப்படை மனித உரிமையை மறுக்கமுடியும்? யாத்திரை தான் சிறப்பான கல்வி. அதுவும் அண்டையிலுள்ள நாட்டு எழுத்தாளர் பரஸ்பரம் யாத்திரை செய்வது எவ்வளவோ அவசியம். பல நல்லபிப்பிராயங்களும். பிரச்னைகளும் சுலபமாகத் தீரவும் இருநாட்டு நல்லுறவுகளையும் பலப்படுத்தி உலக சுபீட்சத்துக்கும் சமாதானத்துக்கும் இது பெரிதும் உதவுமல்லவா!

நரைப்பு மூப்பொடு பிணி வரும் இன்னே,
நன்றியில்வினையே துணிந்தெய்தேன்,
அரைத்த மஞ்சளதாவதையறிந்தேன்,
அஞ்சினேன் நமனுரவர் தம்மை, உரைப்பன்
நானுன சேவடி சேர, உணரும் வாழ்க்கையை ஒன்றறியாத,
இரைப்பனேனுக்கொர் உய்வகையருளாய்,
இடைமருதுறையெந்தை பிரானே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[திருவிடை மருதூரில் எழுந்தருளி இருக்கின்ற எம் குலதேவனே, நரையும் மூப்பும், பிணியும் இப்பொழுதே வரும். அவற்றால் இவ்வுடம்பு அரைக்கப்பட்ட மஞ்சள் போல அழகிழந்ததொழிவதாம். இவற்றை அறிந்தேனாயினும் நன்மையில்லாத செயல்களையே பற்றுகத் துணிந்து இணைத்தேன். அதனால் கூற்றுவனுக்கு அஞ்சுதல் உடையனாயினேன். ஆகவே இதுபோழ்து நான் உன் திருவடிகளை அடைய உன்னை வேண்டுவேனாயினேன். அறிவது அறிந்து வாழும் வாழ்க்கையைச் சிறிதும் அறியாத ஆரவாரச் சொற்களை யுடையேனாகியஎனக்கு நீ உய்யும் நெறியொன்றை வழங்கியருளாய்.]


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - பானுமதி
நடித்த
**மக்களைப் பெற்ற மகராசி**


## இலங்கை இந்திய.....

[1ம் பக்கத்தொடர்ச்சி[

யைச் சேர்ந்த ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் மசோதாவை ஆதரித்து வாக்களிக்கப் போவதில்லையென்றும் விவாதத்தில் கலந்து கொள்ளப் போவதில்லையென்றும் தெரிவித்துவிட்டார். இதற்குக் கட்சியும் அனுமதியளித்துவிட்டது. திரு. நவரத்தினத்தை மேலும் இரண்டு மூன்று தமிழரசு எம். பி.க்கள் பின்பற்றலாமென்று கூறப்படுகிறது.

## ஜே. ஆர். தந்தி

இப்பொழுது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாமீதானவாக்கெடுப்பு இன்று நடைபெறும்போது அரசாங்க கட்சி எம். பி.க்கள்அனைவரும் சபையில் சமூகமாயிருக்கவேண்டியது மிக மிக அவசியம் என்றுஎம். பி.க்களுக்கு ராஜாங்க அமைச்சர் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா தந்திமூலம் அறிவித்திருக்கிறார்.

இந்த மசோதா மீதான விவாதத்தில் எதிர்க்கட்சியைச்சேர்ந்த திரு. பீலிக்ஸ் ஆர்.டயஸ். பண்டாரநாயக்கா பேசுகையில் இலங்கைப்பிரஜைகளாவோர் இந்தியப் பிரஜைகளாவோர்பற்றிய பட்டிறல் தயாரிக்கப்பட வேண்டுமென்றயோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடுமென்றும் இதுபற்றிப்பிரதமர் தெரிவிக்கக்கூடுமென்றும் குறிப்பிட்டார்.

## இலங்கைஇந்தியர் .....

[1-ம்பக்கத்தொடர்ச்சி[

றவர்களாதலால் இங்குவரும் அவர்களுக்கு அப்படியான வசதிசெய்து கொடுக்கவேண்டும். திராவிடமாநிலங்கள் [தமிழ் நாடு, கேரளம்,மைசூர், ஆந்திரா] ஒன்றுபட்டுச் செயலாற்றினால் இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்குவாழ்வளிக்கும்வழிகாணமுடியும்' என்று திரு. அண்ணாதுரை தெரிவித்திருக்கிறார்.

'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகை நிருபருக்கு அண்ணா அளித்துள்ள ஒரு பேட்டியில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். மந்திரிசபை அமைக்கும் அளவுக்கு தி. மு. க. பலம் பெற்றிருக்கிறதென்றும் அண்ணா தமது பேட்டியில் தெரிவித்தார். இங்கு பல நாடுகளையும் சேர்ந்த 70 நிருபர்கள் வந்திருக்கின்றனர்.

## தமிழரசு பார்லி........

[1-பக்கத்தொடர்ச்சி]

கெடுப்புக்கு விடப்படுகையில் தாம் எதிர்த்து வாக்களிக்கப்போவதாகவும், மனச்சாட்சிக்கு விரோதமாக அதனைத்தாம் ஆதரிக்க விரும்பவில்லையென்றும், வாக்களிப்பின்போது சபையிலிருந்து ஒதுங்கியிருக்கவும் தமக்கு இயலாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரிக்கு முன்னால் வீடு கட்டுவதற்கு வசதியான மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, வி. ஏ. ஐயாத்துரை [P. H. I.], சுகாதாரப்பரிசோதகர், கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி என்ற விலாசதாருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 1558

திராட்சைக்கன்றுகள்:

அனுப் இ-ஷா-கி ரூ 2. சகுந்தலா இஸ்கறயில் நீலம் ரூ. 3. யாழ். முந்திரிகைச் செய்கையாளர் சங்கம் இணைக்காரியதரிசி இ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1538

## தேவை

பைண்டர்

அனுபவமுள்ள புத்தகம் கட்டுபவர் [Binder] தேவை. றூளிங் செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு நேரில். ராஜா புத்தகசாலை, சந்தையடி, சங்கானை. 2347

வேலை பழகுவோர்

ராக்ரர், கார் மெக்கானிக் வேலை பழகுவோர் (apprentice mechanics) பலவித கட்டிட படம் வரையப் பழகுவோர் (apprentice Draughtsman) தேவை. அசோக்கா இன்சினியரிங் கோப்பறேஷன், உயிலன்குளம். 1557

## கல்வி

வகுப்புகள்.

வர்த்தகம், சிங்களம், கலை, விஞ்ஞானம், தையல் வகுப்புகள் நடைபெறுகின்றன. 1-3-67 க்கு முன் விண்ணப்பிக்கவும். ஜெயா வர்த்தகக் கல்லூரி, சந்தை வீதி, உடுப்பிட்டி. 1553

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## புகையிலை உற்பத்தி அதிகரித்துள்ளது

நாரந்தனை, திங்கள்

நாரந்தனைப் பகுதியில் சுருட்டுப் புகையிலை உற்பத்தி இவ்வருடம் அதிகரித்துள்ளது வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் வெட்டப்படும் புகையிலை இலைகள் அநேகமாக அடுத்த மாத ஆரம்பத்தில் வெட்டப்படுமென புகையிலை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கட்டாக்காலி மாடுகள் தொல்லை

நாரந்தனை, திங்கள்

சரவணை, நாரந்தனைப்பகுதிகளில் நெல் அறுவடை முடிந்துகொண்டிருப்பதினால், கட்டாக்காலி மாடுகளின் தொல்லை பொறுக்கமுடியாமல் உள்ளது.

இதனால் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள்,

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுதின போட்டிமுடிவுகள்

கொட்டாஞ்சேனை, திங்கள் கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பெற்ற சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டியின் இறுதித் தேர்வில் கீழ்க்காணும் மாணவர் பரிசில்பெற்றுள்ளனர்,

மேற்பிரிவு:— நா. புவனம்மா, யா-மட்டுவில் மகா வித்தியாலயம், செ. செல்வராசா-எட்டியாந்தோட்டை மகா வித்தியாலயம், பெ. யோகேந்திரராசா- யா-மட்டுவில் மகா வித்தியாலயம்

மத்திய பிரிவு — பொ. இரத்தினேஸ்வரி- கொ-தெமட்டகொடை சென்ற் மத்தியூஸ் கல்லூரி, ந. அருட்சோதி- மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கம், ப. ஈஸ்வரி-யா-மட்டுவில் மகா வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு:— க. ஸ்கந்தமூர்த்தி-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, நா. பத்மினி- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இ, தயாபரி- யா-குரும்பசிட்டி தமிழ்க்கலவன் பாடசாலை.

மேற்படி சபையாரால் நடாத்தப்பெற்ற மகாத்மா காந்தியடிகளின் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டியின் இறுதித் தேர்வில் கீழ்க்காணும் மாணவர் பரிசுகள் பெற்றனர்:-

மேற்பிரிவு— மு. ஞானமலர் - தெமட்டக்கொடை சென்ற் மத்தியூஸ் கல்லூரி, ச. யோகேஸ்வரி - யா-மட்டுவில் மகா வித்தியாலயம், செ. சுப்பிரமணியம் - எட்டியாந்தோட்டை மகா வித்தியாலயம்.

மத்தியபிரிவு - சோ. சசிதரன்- கொட்டாஞ்சேனை அர்ச். பெனடிக் கல்லூரி, சோ. கலாதரன் - கொட்டாஞ்சேனை கதீட்ரல் கல்லூரி, ந. வசந்தாதேவி யா-மட்டுவில் மகா வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு:— சி. நாகேந்திரா- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ச. தேவகி- அனுராதபுரம் திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, க. புஷ்பலோசனி- கொ-தெமட்டக்கொடை சென்ற் மத்தியூஸ் கல்லூரி.

## இடநெருக்கடியால் மாணவர் கஷ்டம்

புத்தளம், திங்கள்

புத்தளப் பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் இடநெருக்கடி காரணமாக திறந்தவெளியில் வகுப்புகள் நடைபெறுகின்றன. இதனால் மாணவர் வெயிலால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பாடசாலையிலேற்பட்டுள்ள இட நெருக்கடியினால் இங்கு புதிதாக சேரவிண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் அறியப்படுகிறது.

இந்த நெருக்கடி பற்றி கல்வி இலாகாவுக்குப் பலமுறை புகார் செய்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## கொதிக்கும நீரில் விழுந்து குழந்தை மரணம

மீசாலை, ஞாயிறு

கொதிக்கும் நீருக்குள் விழுந்ததால், ஒன்றரை வயதுக் குழந்தை மரணத்துக்குள்ளான சம்பவம் மீசாலை தெற்கில் நடந்துள்ளது.

சின்னப்பிள்ளை ஆறுமுகம் என்பவரின் சுசிலா என்ற குழந்தையே இக்கதிக்குள்ளாகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். வீட்டில்கிடாரத்துக்குள் கொதித்துக் கொண்டிருந்த நீருக்குள் தற்செயலாகக் குழந்தை விழுந்ததாக மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.


# ரூ. 15,000 பரிசு பெறுங்கள்!

"அதி பிரகாச சலவை தரும்"

# சன்லைட் போட்டி!

முதற் பரிசு ரூ. 5,000/- இரண்டாம் பரிசு ரூ. 2,000/-
200 ஆறுதற் பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூ. 40/-



சுச்சிதமான சுத்தமான ஆடையணிந்தவர்கள் ஒரு கூட்டத்தின் மத்தியில் எப்போதும் தனிக் கவர்ச்சியுடன் விளங்குவார்கள். "அதி பிரகாச சலவை தரும்" சன்லைட் போட்டியிற் பிரவேசித்து, சன்லைட் வழியில், தினமும் சுச்சிதமாயும் சுத்தமாயும் திகழுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே!

(1) மேற்காணும் படத்தில், சன்லைட்... சலவை செய்த சுச்சித உடையணிந்திருப்பவர்கள் ... பேரென்று கணக்கிடுங்கள்.

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு கலப்படமான எத்தனை ஆடைகளைச் சலவை செய்யலாம் என்று குறிப்பிடுங்கள். (கவனிக்கவும்: துப்புக் கிடை... சன்லைட் விளம்பரங்களை வாசியுங்கள்)

(3) ... கூப்பனில் உங்கள் விடைகளையும் பெயர் விலாசத்தையும் துப்புரவாக எழுதி, 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட 2 விசேஷ சன்லைட் சோப் உறைகளை இணைத்து தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்புங்கள்.

(4) ஒரு கூப்பனை 4 விண்ணப்பங்கள் வரைக்கும் உபயோகிக்கலாம். ஆனால் ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் 2 விசேஷ சன்லைட் சோப் உறைகள் இணைக்க வேண்டும்.

முடிவு தேதி 1967 மார்ச் 31

விதிகளும் ஒழுங்குகளும்

1. லீவர் பிரதர்ஸ் (சிலோன்) லிமிட்டெட், ஜே. வால்டர் தொம்சன் கம்பனி (...) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களில் ... குடும்ப ... தினரையும் தவிர இலங்கையில் ... போட்டியிற் பங்குபெறலாம்.

2. நீலக் கட்டத்துக்கு மேல் 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட இரண்டு விசேஷ சன்லைட் உறைகள், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் இணைக்கப்பட வேண்டும்.

3. ... விண்ணப்பங்களும் சுத்தமாக மையினால் எழுதப்பட்டு. 31-3-67 ... முன்போ, தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குக் கிடைக்கும்படி தபாலில் சேர்க்கப்பட வேண்டும். தெளிவாக எழுதப்படாத, தாமதமான அல்லது காணமற்போன விண்ணப்பங்களுக்கு ... பொறுப்பேற்கப்படமாட்டாது.

4. வந்து சேரும் முதலாவது முற்றும் சரியும் சுத்தமுமான விடைக்கு முதற் பரிசும் அதே போல இரண்டாவது பரிசும் ஒவ்வொன்றும் ரூ. 40/- கொண்ட 200 ஆறுதற் பரிசுகளும் வழங்கப்படும். ஒருவருக்கு ஒரு பரிசுக்கு மேல் வழங்கப்படமாட்டாது.

5. சரியான விடையும் பரிசு பெறுவோர் பட்டியலும் 1967 ஏப்ரல் 17ம் தேதி பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

6. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. அதுபற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்கப்படமாட்டாது. போட்டியிற் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் விதிகளை முற்றிலும் புரிந்து கொண்டு அவற்றுக்குக் கட்டுப்படச் சம்மதித்தவராகக் கருதப்படுவர்.

(1) சன்லைட்டினால் அதி பிரகாச சலவை செய்த சுச்சித உடையணிந்திருப்போர் தொகை:

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு சலவை செய்யக்கூடிய கலப்படமான ஆடைகளின் தொகை:

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | | |
| | | | |

பெயர்: ..............................

விலாசம்: ..............................




சன்லைட் அதி பிரகாசமாகச் சலவை செய்கிறது-
வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்!

ஒரு லீவர் உற்பத்தி

-/37


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org